மகாதானபுரத்திற்குப் பாசன வசதி

* 33. வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மகாதானபுரம் வடபாகம் பு. எண். 285/1, 286/95, முதலிய நஞ்சை நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் கோரிக்கை எழுப்பி வருகிறுர்கள் ?

(உ) தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(எ) காலதாமதத்திற்கு உரிய காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) முதல் கோரிக்கை 17—8—1970 அன்று வரப்பெற்றுள்ளது.

(உ) மேற்படி நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க பிறிதொரு தனிப் பட்ட நபரின் நிலத்தின் வழியே கன்னி வாய்க்கால் வெட்டித்தான் தண்ணீர் கொண்டு செல்ல இயலும். மேற்படி நிலத்தை ஆர்ஜிதம் செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஆர்ஜிதம் செய்து பாசன வசதி அளிக்கப் படும்.

(எ) மேற்குறிப்பிட்ட கன்னி வாய்க்கால் வெட்டுவதற்காகும் செலவு முழுவதையும் மனுதாரர்தான் கொடுக்க வேண்டும். அதற்கான ஒப்புதல் கடிதம் 4—8—72 அன்று தான் பெறப்பட்டது. ஆகவே காலதாமதம் ஏற்பட்டது.

Adulteration in pesticides

* 34 Q.—THIRU K. NAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the measures taken by the Government to control adulteration of pesticides?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பூச்சிக்கொல்லி மருந்துகள் பற்றி உயிரியல், இரசாயன சோதனைகள் நடைபெற்று பிறகுதான் வேளாண்மைத் துறை அதற்கு ஒப்புதலளிக்கிறது. அதன்பிறகு அந்தச் சோதனை அறிக்கை பயிர் பாதுகாப்புக் குழுவின் முன் வைக்கப்படுகிறது. அக் குழுவின் ஏற்பளிப்புக்குப் பிறகுதான் ஒவ்வொரு ஆண்டும் ஒப்பந்தப்புள்ளி களைக் கோருவதன் மூலம் வாங்கப்படுகிறது. அத்துடன் இந்தியத் தர நிர்ணயக் குழுவின் அடையாளத்தைப் பெற்றுள்ள இரசாயனங்களும் வாங்கப்படுகின்றன.

தரக்குறைவான மருந்துகளை வழங்கினால் அவர்களை ஒப்பந்தப் பட்டியலி லிருந்து விலக்கப்படுகிறது. அதோடு மட்டுமின்றி விற்பனையாளர்கள் இரசா யனங்களில் கலப்படம் செய்வதைத் தடுக்க பூச்சிக்கொல்லி மருந்து சட்டம் இயற்றப்பட்டுள்ளது—

(1) அச்சட்டத்தின்படி முதற் குற்றத்துக்கு இரண்டாண்டு காலம் சிறைத் தண்டனை அல்லது 2 ஆயிரம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

(2) இரண்டாவது மற்றும் அதைத் தொடர்ந்த குற்றத்திற்கு 3 ஆண்டு காலம் சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டு தண்டனைகளும்.

திரு. என். கணபதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த பூச்சிக் கொல்லி மருந்து சட்டத்தின்கீழ் எத்தனை வழக்குகள் போடப்பட்டிருக் கின்றன? அவற்றின்மீதான முடிவுகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போடவும்.

Construction of cheap houses

* 35. *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that a new technique has been evolved by the State Housing Board for the construction of cheap houses in Madurai district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம். சென்னை மாநகருக்கு வெளியே முதன்முறையாக மதுரையில் (காடினரி) கூண்டு வகை வீடுகளை முன்னோடி அடிப்படையில் கட்ட முயன்று பார்க்கப்படுகிறது.

(இ) 270 சதுர அடி கட்டிடப் பரப்பும், 237 சதுர அடி தரைப்பரப்பு முடைய ஒவ்வொரு வீட்டிற்கும் ஆகும் செலவு ரூ. 3,800. 4½ அங்குல கன முடைய செங்கல் ஓரங்களில் 1-க்கு 5 என்ற விகிதத்தில் சிமிட்டிச் சாந்து இட்டு கூண்டு (காடினரி) வடிவில் கட்டடம் முழுவதும் கட்டப்படுகிறது. இதனால் கூரைக்கு எஃகு பயன்படுத்தும் அவசியமில்லை. சுவருக்கு அஸ்தி வாரம் தேவையில்லை. கட்டிட அடிப்பரப்பு மட்டத்தில் இணைக்கும் உத்திரம் ஒன்றைக் கொண்டு காடினரி கட்டுமானங்கள் முயன்று பார்க்கப்படுகின்றன. சாளர விதானங்களுக்கு மட்டும் வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவை பயன் படுத்தப்படுகிறது. மண் உறுதியாக இல்லாவிட்டால் தரை மட்டத்திலிருந்து எழும் உத்தரத்திற்கு வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவை பயன்படுத்தப்படு கிறது.